கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

முன்னிலை - திரு. எஸ்.ராஜசிம்மவர்மன் , B.A.B.L ( Hons),
கூடுதல் மாவட்ட நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

2023 ம் ஆண்டு ஜூன் திங்கள் 01 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2053 தமிழ் சோபகிருது ஆண்டு வைகாசிமாதம் 18 ம் நாள்

<u>வழக்கிடை மனு எண். 13 /2023</u>

<u>இன்</u>

<u>அசல் வழக்கு எண். 24/2021</u>

சிவக்குமார் ..... மனுதாரர் / வாதி

/ எதிர்/

பார்த்திபன் .... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு 28.04.2023 அன்று இறுதி விசாரணைக்கு என் முன்னர் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. கு. இளவரசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. டி.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.......

## <u>உத்தரவு</u>

மனுதாரர் / வாதி தரப்பில் , அசல் வழக்கில் சில ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக் கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை

முறை சட்டம் கட்டளை .7 விதி. 14(3) ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம் -</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர் மனுதாரரிடம் அவருடைய குடும்ப செலவு , மருத்துவ செலவு மற்றும் ஒப்பந்த பணிகளுக்காக 20.01.2020 , 29.02.2020 25.06.2020 ஆகிய தேதிகளில் முறையே ரூ.10,00,000/- ரூ.10,00,000/- மற்றும் ரூ.8,00,000/-, ஆக மொத்தம் ரூ.28,00,000/-மும், பெற்றுக் கொண்டுள்ளார். அதற்கு ஆதரவாக 25.06.2020 அன்று எதிர்மனுதாரர் மனுதாரருக்கு 04.12.2020 தேதியிட்ட ரூ. 28,00,000/- மதிப்பு கொண்ட இந்தியன் வங்கி காசோலை எண். 430040-யை மனுதாரர் நடத்தி வரும் எஸ்.எஸ்.கே. கட்டுமான நிறுவனத்தின் பெயருக்கு வழங்கியுள்ளார். அந்த காசோலை படி தொகையை திரும்ப பெற மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். தற்போது 13.03.2023 அன்று பிரதிவாதி தரப்பில் மேற்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்தவதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. எனினும் இந்த வழக்கை தீர்மானிக்க உதவும் மிக முக்கியமான சாட்சிகளை மனுதாரர் தரப்பில் விசாரணை செய்ய வேண்டியுள்ளது. அதே போல் பிரதிவாதி தரப்பில் சில முக்கிய கேள்விகள் கேட்கப்படாமல் விடுபட்டுவிட்டது. மேற்படி மனுதாரர் தன் தரப்பு ஆட்சேபணையை தாக்கல் செய்யும்போதே அவர் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்திருக்க வேண்டும். மேற்படி வழக்கின் ஆவணங்கள் தற்போது கிடைக்கப் பெற்றதன் அடிப்படையில் உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல்

தற்போது தான் இம்மனுவுடன் தாக்கல் செய்வதாகவும், அவற்றை ஏற்றுக் கொண்டு உத்தரவிடக்கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொதுவான எதிர் வழக்குரையின் சுருக்கம் -**

மனு நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் மனுதாரரிடம் இருந்து எந்த தொகையும் பெறவில்லை. மேலும் காசோலை எதையும் வழங்கவில்லை . மனுதாரர் அசல் வழக்கை 04.12.2020 தேதியிட்ட காசோலை எண். 430040 ன் அடிப்படையில் ரூ. 28,00,000/-யை திரும்ப கோரி தாக்கல் செய்துள்ளார். ஆனால் ஏற்கனவே, எதிர்மனுதாரர் / பிரதிவாதி 20.01.2020 தேதியிட்ட காசோலை எண். 031960 காசோலை மூலம் ரூ.10,00,000/- யும், 29.02.2020 தேதியிட்ட காசோலை எண். .031961 காசோலை மூலம் ரூ.10,00,000/- யும், 30.3.2020 தேதியிட்ட 031960 காசோலை மூலம் ரூ. 8,00,000/-யும் மனுதாரருக்கு செலுத்தியுள்ளார். மேற்சொன்ன காசோலை எண். 031960 மற்றும் காசோலை எண். 031961 ஆகிய காசோலைகளின்படி பணம் செலுத்தப்பட்டுவிட்டது. காசோலை எண். 031962 தேதியிட்ட 3ம் காசோலையானது மனுதாரரால் திரும்ப பெறப்பட்டு மீண்டும் 031981 என்ற புதிய காசோலை வழங்கப்பட்டு அதன்படி எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்தவேண்டிய கடன்கள் அனைத்தும் நேர் செய்யப்பட்டுவிட்டது. அதன் பிறகு எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எதிராக தொகையை திரும்ப கோரி அசல்வழக்கு எண். 93/2020 வழக்கை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தான்

தனது வழக்கை தன்னிச்சையாக நிரூபிக்க வேண்டுமே தவிர பி.வா.சா.1 -யை திரும்ப அழைக்கக் கோரும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மேலும் கேள்விகள் விடுபட்டுவிட்டது என்ற காரணத்தால் பிரதிவாதியை திரும்ப அழைக்க இயலாது. எனவே, மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடிக்குரியது ஆகும்.

4) இந்த மனுவில் இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் தீர்வு காண வேண்டிய பிரச்சனைகளாக கருதுவது யாதெனில்.

1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதா?

2. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**6) பிரச்சனை எண்.1 மற்றும் 2 -**

இந்த மனுவில் மனுதாரர்/ வாதியால் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக காசோலை அடிப்படையில் தொகையை திரும்ப பெறக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், தற்போது அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு மேற்கொண்டு சாட்சிகள் விசாரணைக்கு வாய்தா போடப்பட்ட நிலையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

7) இந்த மனுவுடன் இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள மற்ற மனுக்களையும் பரிசீலித்து பார்க்கும்போது மனுதாரர் புதிய ஆவணங்களை தாக்கல் செய்யவும், அது குறித்து பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு செய்யவும் கோரியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. எனவே புதிய சங்கதிகளின் அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற மனுதாரரின் வாதம் ஏற்புக்குரியதாகவே உள்ளது.

8) மேற்படி மனுதாரரின் வழக்கு உண்மையானதா? அல்லது எதிர்மனுதாரரின் வழக்கு உண்மையானதா? என்பதை குறித்து இந்த மனுவில் தீர்மானிக்க இயலாது. அதை குறித்து அசல் வழக்கில் தான் தீர்மானிக்க இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனினும் இம்மனுவை கவனத்துடன் பரிசீலித்து பார்க்கும்போது, அசல் வழக்கில் தனது தரப்பு வாதத்தை முன் வைக்கும் பொருட்டும், இது குறித்து மனுதாரருக்கு போதிய வாய்ப்பை வழங்கும் பொருட்டும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9) மனுதாரர் இந்த மனுவின் மூலம் விடுபட்ட வெற்றிடங்களை நிரப்ப முயற்சிக்கிறார் என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதத்திற்கு போதிய ஆதரவுகள் எதுவும் சமர்பிக்கப்படவில்லை. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இம்மனு தாக்கல் செய்துள்ள நிலையில் நிலைக்கத்தக்கது என்றே பிரச்சனை எண். 1க்கு தீர்வு காணப்படுகிறது. அதனடிப்படையில், இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றே பிரச்சனை எண் . 2 க்கு தீர்வு காணப்படுகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் ,

1 இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

2. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து, பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2023 ம் ஆண்டு ஜூன் திங்கள் 01 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-). S.Rajasimmavarman,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
(விரைவுநீதிமன்றம்)
விழுப்புரம்.

**<u>மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** - இல்லை.

**<u>மனுதாரர்கள் , எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** - இல்லை

(Sd/-). S.Rajasimmavarman,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
( விரைவு நீதிமன்றம் ),
விழுப்புரம்.

S RAJASIMMAVARMAN
Digitally signed by S RAJASIMMAVARMAN
Date: 2023.06.12 13:20:59 +0530